# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 84/ந/2026, நாள் 11.06.2026

A. நாகராஜன்,
விருதுநகர், விருதுநகர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
விருதுநகர், விருதுநகர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், விருதுநகர், கட்டபொம்மன் தெரு, எண்.274 என்ற முகவரியில் வசிக்கும் திரு A. நாகராஜன் என்பவரது நாளிடப்படாத புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.03.2026 அன்று பெறப்பட்டு, 84/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விருதுநகர் மாவட்டம், விருதுநகர், கட்டபொம்மன் தெரு, எண்.274 என்கிற முகவரியில் வசிக்கும் திரு A. நாகராஜன் என்பவரின் நாளிடப்படாத மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"எனக்கு 4 ஆண்டுகளுக்கு முன் நடந்த விபத்தில் 1 கால் துண்டிக்கப்பட்டு நடக்க முடியாத நிலையில் இருந்து வருகிறேன்.

என் தகப்பனார் A. அண்ணாமலை செட்டியார் தனது வீட்டை என் தாயார் பெயருக்கு பத்திரபதிவு அலுவலகத்தில் பதிவு செய்து, என் தாயார் A.சுலோச்சனாவுக்கு உயில் எழுதி உள்ளார்.

என் தாயார் A.சுலோச்சனா அவர்கள் தனது வீட்டை என் பெயருக்கும் (A.நாகராஜன்) என் சகோதரர் மகன் திரு. S. கௌதம் பெயருக்கும் பத்திர பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து உயில் வழங்கி உள்ளார்.

என் தகப்பனார் திரு. A. அண்ணாமலை செட்டியாரும், என் தாயார் திருமதி. A.சுலோச்சனா அவர்களும் இறந்துவிட்டார்கள்.

எனவே, க.எண். 274, கட்டபொம்மன் தெருவில் உள்ள வீட்டை எனது பெயருக்கும், என் சகோதரர் மகன் பெயருக்கும் உரிய ஆவணங்களுடன் உரிய கட்டணம் பெயர் மாற்றம் செய்ய ரூ.500/–ம், கொடி நாள் ரசீதுக்காக ரூ.50/–ம் சேர்த்து செலுத்த எனது நண்பர் திரு. A. செல்வகனி, 17/1 பாரப்பட்டி தெருவில் குடியிருந்து வருபவரிடம் கொடுத்து அனுப்பி இருந்தேன்.

அவரிடம் விருதுநகர் நகராட்சி பெண் காசாளர் விண்ணப்பம் கட்டணம் பெற மறுத்து, சம்பந்தப்பட்ட பிரிவு வருவாய் ஆய்வாளர் G. சரஸ்வதி அவர்களிடம் கையொப்பம் பெற்று வந்தால் மட்டுமே பெறமுடியும் என்றும், மீறி விண்ணப்பம் பெற்றால் தன்னை ஒருமையில் திட்டுவதாகவும் கூறி மறுத்துவிட்டார்.

இதன் பேரில் எனது நண்பர் திரு.செல்வகனி அவர்கள் G. சரஸ்வதி வருவாய் ஆய்வரை அணுகிய போது, அவர் சொத்தின் உரிமையாளர் நேரில் வந்தால் மட்டுமே விண்ணப்பம் வழங்க கையொப்பம் இடமுடியும் என்றும், சொத்து பெயர் மாற்றம் தொடர்பாக விண்ணப்பம் ஏப்ரல் மாதத்திற்கு பின்பு தான் கொண்டு வரவேண்டும் என்று ஆணையர் வாய்மொழி உத்தரவாக உத்திரவு செய்துள்ளார் என்றும் கூறி கையொப்பம் செய்ய மறுத்துள்ளார்.

சமூகம் அவர்கள் எனது தகப்பனார் திரு. A. அண்ணாமலை செட்டியார், தாயார் A.சுலோச்சனாம்மாள் அவர்களிடம் இருந்து பதிவு செய்யப்பட்ட உயில் மூலமாக எனக்கும் (A. நாகராஜன்), என் சகோதரர் மகன் S. கௌதம் பெயரில் பெயர் மாற்றம் செய்யவும், அதற்குரிய கட்டணம் செலுத்தவும் உத்தரவு செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இந்த மனுவுடன் விருதுநகர் நகராட்சி ஆணையர் பெயருக்கு வங்கி டிமாண்ட் டிராப்ட் எடுத்து இத்துடன் அனுப்பி உள்ளேன். (DBS பேங்க் இந்தியா லிமிடெட் D.D.எண்.672371).''

2. மனுதாரரின் மனுவுடன் பெறப்பட்ட ரூ.550க்கான DBS வங்கி விருதுநகர் கிளையில் எடுக்கப்பட்ட விருதுநகர் நகராட்சி ஆணையரின் பெயரிலான வங்கி வரைவோலை எண்.672371, நாள் 02.03.2026 இம்முறை மன்ற நடுவத்தின் கடிதம் ந.க.எண்.322/ந/2026 நாள்27.03.2026ன் மூலம் மனுதாரருக்கு திருப்பி அனுப்பப்பட்டு ஒப்புகை பெறப்பட்டுள்ளது.

3. மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 09.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் விருதுநகர் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

4. விருதுநகர் நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை எதுவும் பெறப்படவில்லை.

5. இந்நிலையில், மனுதாரரின் 25.05.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்காணும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எனது மனு 06.03.2026ல் பெறப்பட்டு தங்கள் அலுவலக எண். 84/ந/2026ல் மனுவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் பெயரில் எனக்கு ஆணையரால் 13.05.2026 தேதியில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட உத்தரவு 22.05.2026ல் கிடைக்கப்பெற்றேன். தாங்கள் செய்த உதவிக்கு மிகவும் நன்றி'' என தெரிவித்துள்ளார்.

6. மனுதாரரின் புகார் மனு, மனுதாரரின் 25.05.2026 நாளிட்ட கடிதம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலித்ததில் கீழ்காணும் விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரரின் தகப்பனார் மனுதாரரின் தாயார் பெயருக்கு உயில் எழுதி கொடுத்த க.எண். 274, கட்டபொம்மன் தெருவில் உள்ள வீட்டை மனுதாரரின் தாயார், மனுதாரர் மற்றும் மனுதாரரின் சகோதரர் மகன் பெயருக்கு உயில் மூலம் பத்திர பதிவு செய்து உள்ளார் என்பதும், தனது தாயார் மறைவிற்கு பின்னர் விபத்தில் மனுதாரரின் கால் துண்டிக்கப்பட்டதால் நடக்க இயலாத நிலையில், மேற்படி வீட்டிற்கான சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய உரிய ஆவணங்களுடன் மனுதாரரின் நண்பர் மூலம் நகராட்சி அலுவலகத்திற்கு கொடுத்து அனுப்பியுள்ளார் என்பதும், பெயர் மாற்றம் செய்ய சொத்தின் உரிமையாளர் நேரில் வரவேண்டும் என வருவாய் ஆய்வர் தெரிவித்து பெயர் மாற்றும் விண்ணப்பத்தினை வாங்க மறுத்துள்ளார். என்பதும், உயில் மூலம் பெறப்பட்ட தங்களது மூதாதையரின் சொத்திற்கான சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை

நாடியதைத் தொடர்ந்து விருது நகர் நகராட்சியால் மனுதாரரின் கோரிக்கை ஏற்கப்பட்டு மனுதாரருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதால் இம்முறைமன்ற நடுவத்திற்கு நன்றியை தெரிவித்துள்ளார் என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் கடிதங்கள் வாயிலாக அறியமுடிகிறது.

இந்நேர்வில், மனுதாரரின் கோரிக்கை ஏற்கப்பட்டு மனுதாரருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளதை ஏற்று, மனுதாரரின் புகார் மனுமீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜுன் திங்கள் 11–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. A. நாகராஜன்,
த/பெ. அண்ணாமலை செட்டியார்,
எண். 274, கட்டபொம்மன் தெரு,
விருதுநகர் – 626 001,
விருதுநகர் மாவட்டம்.
செல். 9489036914.

2. நகராட்சி ஆணையர்,
விருதுநகர் நகராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.